29.04.2016

தினமணி

# இன்றைய வேளாண் செய்திகள்

## எலுமிச்சம்பழம் விலை உயர்வு

ராஜபாளையத்தில் வியாழக்கிழமை நடைபெற்ற வாரச்சந்தையில் ஏலுமிச்சம்பழம் கிலோ ரூ. 150-க்கு விற்பனையானது. கடந்த வாரம் ஏலுமிச்சம்பழம் கிலோ ரூ. 100 முதல் ரூ 120 வரை விற்றது. தற்போது கோடை வெயிலால் எலுமிச்சம்பழம் தேவை அதிகரித்துள்ளதாலும் விளைச்சல் குறைந்துள்ளதாலும் கிலோ ரூ. 140 முதல் ரூ. 150 வரை விற்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் விளையும் எலுமிச்சம்பழங்களை அதிகளவில் கேரள வியபாரிகள் வாங்கிச்செல்வதால் ராஜபாளையம் சந்தைக்கு வரத்து குறைந்துள்ளது.

## அவிநாசியில் பருத்தி விலை குவிண்டாலுக்கு ரூ. 500 உயர்வு

அவிநாசியில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் குவிண்டாலுக்கு ரூ. 500 விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 740 மூட்டைகள் வந்திருந்தன. இதில், ஆர்.சி.எச். ரகப் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 5,500 முதல் ரூ. 6,250 வரையிலும், டி.சி.எச். ரகப்பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 4,800 முதல் ரூ. 5,500 வரையிலும், மட்டரகப் பருத்தி ரூ. 1,600 முதல் ரூ. 2,100 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 10 லட்சத்து, 86 ஆயிரத்துக்கு விற்பனை நடைபெற்றது.

இதில், கடந்த வாரத்தை விட குவிண்டாலுக்கு ரூ. 500 விலை அதிகரித்ததால், பருத்தி விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இந்த ஏலத்தில், பென்னாகரம், கிணத்துக்கடவு, கோபி, நம்பியூர், அன்னூர், திருப்பூர், பல்லடம், சேவூர், குன்னத்தூர், அவிநாசி, புளியம்பட்டி, மேட்டூர், அன்னூர் ஆகிய பகுதிகளிலிருந்து 740 பருத்தி விவசாயிகளும், கோவை, ஈரோடு பகுதியிலிருந்து 10 பருத்தி வியாபாரிகளும் கலந்து கொண்டனர்.

## சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 93 அடி

கடுமையான வெயில், தொடர் தண்ணீர் திறப்பு காரணமாக சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 93.60 அடியாகக் குறைந்துள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கடும் வெயில் பதிவாகி வருகிறது. அனல் காற்று வீசுவதால் பொதுமக்கள் வாகனங்களில் செல்லக்கூட தயங்குகின்றனர். இந்நிலையில், சாத்தனூர் அணையில் இருந்து கடந்த பிப்ரவரி 12-ஆம் தேதி முதல் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பயன்பெற்று வருகின்றனர். தொடர் தண்ணீர் திறப்பு, கடும் வெயில் காரணமாக சாத்தனூர் அணையின் நீர்மட்டம் 119 அடியில் இருந்து 93.60 அடியாகக் குறைந்துள்ளது.

அணையில் வியாழக்கிழமை நிலவரப்படி, 2,883 மில்லியன் கனஅடி தண்ணீர் உள்ளது. அணையின் இடதுபுறக் கால்வாய் வழியாக விநாடிக்கு 370 கனஅடி தண்ணீரும், வலதுப்புற கால்வாய் வழியாக விநாடிக்கு 220 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெப்பத்தை குறைக்கும் மரங்கள்

கோயில் பகுதியில் ஏதேனும் ஒரு வகை மரங்களாவது கட்டாயம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற நோக்கத்தில் தான் 'ஸ்தல விருட்சங்கள்' என்ற கருத்து வந்தது. இவை வெயில் கால வெம்மையைக் குறைத்தன. திருநெல்வேலியின் ஸ்தல விருட்சம் மூங்கில். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள திருப்புவனத்தின் ஸ்தலவிருட்சம் பலா. கோடைக்கு அதிக குளிர்ச்சியைத் தரும் வேப்பமரம் 'வைத்தீஸ்வரன் கோயில்' ஸ்தல விருட்சமாக உள்ளது. கோடைக்கு குளிர்ச்சிக்காக பூசப்படும் சந்தனமரம் ஸ்தல விருட்சமாக மதுரைக்கு அருகில் உள்ள அழகர் கோயிலில் உள்ளது. அதிக நிழல் தரும் ஆலமரம் திருவாலம்பொழிலின் ஸ்தல விருட்சமாக உள்ளது.

## கிணற்று பாசனத்தில் கம்பு பயிர்: தரகம்பட்டி விவசாயிகள் சாதனை

தரகம்பட்டி: கடவூர் தாலுகாவுக்கு உட்பட்ட, கிருஷ்ணராயபுரம் அருகில் ஆங்காங்கே கிடைக்கும் கிணற்றுப்பாசனம் மூலம், கம்பு, சோளம், கரும்பு போன்றவற்றை பயிரிட்டு வருகின்றனர்.

இதுகுறித்து தரகம்பட்டி விவசாயி குப்புராஜ், 49, கூறியதாவது: கரூர் மாவட்டத்தில் கடைக்கோடியான கடவூர், தரகம்பட்டி பகுதிகளில் பாசன வசதி கிடையாது. ஆங்காங்கே கிடைக்கும் கிணற்றுப்பாசனம் மூலம் கால சூழ்நிலைக்கு ஏற்ப விளையும் பயிர்களை பயிரிட்டு வருகிறோம். தற்போது கோடை வெப்பம் நிலவி வருவதால் அதற்கேற்ப கம்பு, சோளம் போன்ற பயிர்களை பயிரிட்டு வருகிறோம். குறைந்த தண்ணீரில் இவற்றை பயிரிட்டு லாபம் ஈட்டி வருகிறோம். சர்க்கரை நோயாளிகளுக்கு அவசியமான கம்பு இப்பகுதியில் பயிராவது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. கடையில் கம்பு பவுடர் வாங்கி

உபயோகிப்பதை விட இயற்கையாக விளையும் கம்பை வாங்கி மக்கள் பயன்படுத்தினால் அதிகம் பயன்பெறுவர். இவ்வாறு அவர் கூறினார்.

## வாழை மர சேதங்களை தடுப்பது குறித்து அறிவுரை

சின்னமனூர்: “வாழைத்தோட்டங்களை சுற்றிலும் 'சுங்குனியானா' ரக சவுக்கு மரக்கன்றுகளை நடுவதால் காற்றில் மரங்கள் சேதமாவதை தடுப்பதுடன் உபரி வருவாய் கிடைக்கும்”, என்று சென்டெக்ட் அறிவியல் மையத்தலைவர் மாரிமுத்து அறிவுறுத்தியுள்ளார்.

மாவட்டத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் 'திசு' வாழையும், 5 ஆயிரம் ஏக்கரில் பிற ரக வாழையும் பயிரிடப்படுகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் கம்பம் பள்ளத்தாக்கு, சின்னமனுௗர் பகுதியில் வீசிய சூறைக்காற்றால், அறுவடைக்கு தயாராக இருந்த 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் முறிந்து விழுந்தன.

பத்து மாதங்களாக பாதுகாத்த வாழை மரங்கள் ஒரு சில நிமிடம் வீசிய சூறைக்காற்றில் சேதமடைந்ததால் விவசாயிகளுக்கு பல லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது.

காற்று வீச்சில் வாழை மரங்கள் சேதமடையாமல் தடுப்பது குறித்து சென்டெக்ட் அறிவியல் மைய தலைவர் மாரிமுத்து கூறியதாவது:

விவசாயிகள் வரப்பை சுற்றி அகத்தி, சித்தகத்தியை உயிர்வேலியாக அமைக்கின்றனர்.

இந்த வேலியால் காற்றின் மேலடுக்கில் இருந்து வரும் காற்றின் வேகத்தில் ஏற்படும் சேதத்தை தடுக்க முடியாது.

சுங்குனியானா ரக சவுக்கை நடவு செய்வதன் மூலம் காற்றினால் வாழைமரம் சேதமாவதை தடுக்க முடியும்.

கடைசி உழவுக்கு பின் வரப்பின் உள்பக்கம் சவுக்கு கன்று நடவு செய்ய வேண்டும்.

ஒரு மீ., இடைவெளியில் அடுத்த வரிசையை போல நடவேண்டும். பின் இரண்டு மீ., இடைவெளியில் பெருக்கல் குறி போல நட வேண்டும்.

வாழை மரங்கள் காற்றின் வேகத்தில் சேதமாவதை தடுப்பதுடன் உபரி வருவாயும் கிடைக்கும், என்றார்.

## வறட்சியிலும் வருமானம் பார்க்க கரிமூட்டம் போடும் விவசாயிகள்

ஆர்.எஸ்.மங்கலம்: வறட்சியினால் வருமானத்தை இழந்துள்ள விவசாயிகள் பலர் கரிமூட்டம் போடும் தொழிலுக்கு தாவியுள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் பகுதிகளில் வரலாறு காணாத வறட்சி நிலவிவருகிறது. நீர்நிலைகள் காய்ந்துவிட்டதால் கோடைகால பயிர் சாகுபடி அடியோடு முடங்கிவிட்டது.

இதனால் வருமானத்தை இழந்துள்ள விவசாயிகள் பலர் வேறுவழியின்றி மாற்று தொழிலாக கரிமூட்டம் போடுவதில் கவனம் செலுத்திவருகின்றனர். குறிப்பாக ஆர்.எஸ்.மங்கலம், செங்குடி, சீனாங்குடி, உப்பூர் , மங்கலம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பட்டா நிலங்களில் உள்ள கருவேல மரங்களை வெட்டி கரி மூட்டம் போடுகின்றனர்.

இவற்றிலிருந்து பிரித்தெடுக்கும் கரியினை விற்று காசாக்கி வருகின்றனர். கடும் வறட்சியிலும்

கரிமூட்டம் தொழில் கைகொடுப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

ஆர்.எஸ்.மங்கலத்தை சேர்ந்த முனீஸ்வரன் கூறுகையில்,“ கருவேல மரங்களை வெட்டி விறகாக்கிய பின் பக்குவமாக அடுக்கி தீ மூட்டுவோம். மூன்று நாட்களுக்கு பின் தண்ணீர் ஊற்றி தீயை அணைத்தபின் கரிகளை தரம் பிரித்து விற்பனை செய்கிறோம். ஒரு டன் கரி ரூ.10 ஆயிரம் முதல் 13 ஆயிரம் வரை விற்பனையாகிறது,” என்றார்.

**தினகரன்**

## இன்றைய வேளாண் செய்திகள்

## ஆந்திரா மிளகாய் வற்றல் கிலோ ரூ.150க்கு விற்பனை

தர்மபுரி, : தர்மபுரியில் ஆந்திரா மிளகாய் வற்றல் கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் பென்னாகரம், ஏரியூர் பாப்பாரப்பட்டி, இண்டூர் பகுதிகளில் சுமார் 10ஆயிரத்திற்கும் ேமற்பட்ட ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டு வருகிறது. இதே போல் ஆந்திர மாநிலம் குண்டூர் மற்றும் கடப்பா மாவட்டங்களில் இருந்து மிளகாய் வற்றல் வரத்து உள்ளது. தர்மபுரி சந்தைகளில் ஆந்திரா மிளகாய் ஒரு கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்பட்டது.

இது குறித்து மிளகாய் வியாபாரி கூறுகையில், 'தர்மபுரி மாவட்டத்தில் விளையும் மிளகாய் வற்றல் கிலோ ரூ.100க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆந்திரா மிளகாய் வற்றல் மிகவும் காரமாக இருப்பதால், உள்ளூர் மிளகாயை விட, ஆந்திரா மிளகாய் வற்றலுக்கு மவுசு அதிகமாக உள்ளது. ஆந்திரா மிளகாய் வற்றல் தற்போது கிலோ ரூ.150க்கு விற்பனை செய்யப்படுகிறது' என்றனர்.

## பயறுவகை பயிர்களில் எடை நிறைந்த மணிகள் பெற நுண்ணூட்ட கரைசல்

**சேதுபாவாசத்திரம், : பயறுவகை பயிர்களில் திரட்சியான எடை நிறைந்த மணிகள் பெற நுண்ணூட்ட கரைசல் தெளிப்பது அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாந்தி வெளியிட்டுள்ள அறிக்கை: தனி ஒரு மனிதன் உடல் ஆரோக்கியத்துக்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக 85 கிராம் புரதச்சத்து எடுத்து கொள்ள வேண்டியுள்ளது.**

**இவை பயறுவகை பயிர்களில் மட்டுமே கிடைக்கிறது. உளுந்து, பாசிபயறு போன்ற பயிர்களில் 20 முதல் 25 சதம் வரை புரதச்சத்து கிடைக்கிறது. உற்பத்தி திறன் குறைவால் மனிதனுக்கு நாள் ஒன்றுக்கு 36.5 கிராம் புரதச்சத்து மட்டுமே எடுத்து கொள்ள முடிகிறது. புரதச்சத்து**

**நிறைந்த திரட்சியான மணிகளை பெற பயறுவகை பயிர்களில் நுண்ணூட்ட கரைசல் தெளிப்பது அவசியம்.**

**இக்கரைசல் தயாரிக்க தேவையான 3 கிலோ யூரியா, 780 கிராம் டிஏபி, 525 கிராம் பொட்டாஷ், 420 கிராம் பொட்டாசியம் சல்பேட், 16 கிராம் சக்சினிக் அமிலம், 50 மில்லி டீபால் ஆகியவற்றை 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து அக்கரைசலை ஒரு ஏக்கர் பரப்பில் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். எனவே தற்போது சாகுபடி செய்துள்ள உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களில் நுண்ணூட்ட கரைசல் தெளித்து அதிக மகசூலுடன் கூடிய புரதச்சத்து நிறைந்த திரட்சியான மணிகளை பெற்று பயனைடையலாம்.**

## ரப்பர் விலை ஏறுமுகம் கிலோ ரூ143 ஆக அதிகரிப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

நாகர்கோவில், : கடும் வீழ்ச்சியடைந்த ரப்பர் விலை மீண்டும் உயரத்தொடங்கியுள்ளது. ரப்பர் விலை கடும் சரிவை சந்தித்திருந்தது. கடந்த பிப்ரவரி மாதம் ஆர்எஸ்எஸ் 4 கிரேடு ரப்பர் விலை ரூ.91.50 ஆக சரிந்திருந்தது. தற்போது 56.3 சதவீதம் உயர்ந்து ரூ.143 ஆக உயர்ந்துள்ளது. ரப்பர் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது. அதிக அளவு ரப்பர் உற்பத்தி செய்கின்ற மலேஷியா, இந்தோனேஷியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் சர்வதேச மார்க்கெட்டில் ரப்பரின் விலை உயருவதற்காக ஏற்றுமதிக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்தன.

இதன் காரணமாக ரப்பர் விலை உயர தொடங்கியுள்ளது. மேலும் கச்சா எண்ணெய் விலை உயர்வும் இதற்கு மற்றொரு காரணம் ஆகும். வரும் ஆகஸ்ட் 31ம் தேதி வரை உலக நாடுகள் ரப்பர் ஏற்றுமதியில் 6 லட்சத்து 15 ஆயிரம் டன் குறைக்க முடிவு செய்துள்ளது.

இந்தியாவில் இந்த ஆண்டு மொத்த உற்பத்தி வழக்கத்தைவிட 6 லட்சம் டன் அதிகம் ஆகும். சர்வதேச மார்க்கெட்டில் ரப்பர் வரத்து குறைய தொடங்கியுள்ளதால் விலை உயர தொடங்கியுள்ளது. ஆகஸ்ட் 31 வரை

ரப்பர் ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும் அதனை தொடர செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் ரப்பர் விலை தொடர்ந்து உயருவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளன. இது ரப்பர் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**சருமத்தை அழகாக்கும் கற்றாழை**



கோடையில் கொளுத்தும் வெயிலால் தோல் பெரிதும் பாதிக்கும். தோலில் கருமை நிறம் ஏற்படும். குறிப்பாக, காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். வெயிலின் தாக்கத்தை சமாளிப்பதற்கான மருத்துவம் குறித்து பார்ப்போம்.அதிக வெயிலால் தோலில் ஏற்படும் எரிச்சல், சிவப்பு தன்மை, கொப்பளங்கள், வியர்குரு ஆகியவற்றை போக்கும் முறையை பார்க்கலாம். பருத்தி துணியை குளிர்ந்த நீரில் நனைத்து பிழிந்து எடுக்கவும்.

தோலில் பாதிப்பு உள்ள இடத்தில் 15 நிமிடங்கள் வரை ஒத்தடம் கொடுக்கவும். இவ்வாறு செய்துவர எரிச்சல் அடங்கி தோல் பழைய நிலைக்கு திரும்பும்.வெயில் காலத்தில் வெப்பம் அதிகமாக இருப்பதால் உடலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படும். எரிச்சல், வியர்வை போன்றவற்றால் உடலில் அரிப்பு ஏற்படும். எனவே, நாம் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம். சோற்று கற்றாழையை

பயன்படுத்தி தோலை பாதுகாக்கும் மருந்து தயாரிக்கலாம்.

சோற்று கற்றாழையின் தோல் பகுதியை நீக்கிவிட்டு சதையை எடுக்கவும். இதை தோலில் தடவினால் புறஊதா கதிர்களில் இருந்து சருமத்தை பாதுகாக்கும். வியர்குருவை போக்குகிறது. பல்வேறு மருத்துவ குணங்களை கொண்ட சோற்றுக் கற்றாழை சருமத்துக்கு அழகு, ஆரோக்கியத்தை கொடுக்கிறது. உருளைக் கிழங்கை பயன்படுத்தி, உஷ்ணத்தால் தோலில் ஏற்படும் பாதிப்பை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

உருளை கிழங்கில் இருந்து சாறு எடுத்து, அரிசி மாவுடன் சேர்த்து கலக்கவும். தோலில் பாதிப்பு உள்ள இடத்தில் இதை தடவவும். இதனால் தோல்நோய்கள் குணமாகும். பல்வேறு நன்மைகள் கொண்ட உருளை கிழங்கு புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. நுண்கிருமிகளை அழிக்கவல்லது. மேல்பூச்சாக போடும்போது உடலுக்கு குளிர்ச்சியை தருகிறது. டீ தூளை பயன்படுத்தி தோலில் ஏற்படும் அரிப்பை சரிசெய்யும் மருந்து தயாரிக்கலாம். டீ தூளில் நீர்விட்டு நன்றாக காய்ச்சவும்.

இதை வடிகட்டி எடுத்து எலுமிச்சை சாறு சேர்க்கவும். பின்னர், ஒரு மெல்லிய துணியில் நனைத்து தோலில் தடவினால் தோலில் ஏற்படும் எரிச்சல் சரியாகும். காலை, மாலை இவ்வாறு செய்துவர சிவப்புதன்மை மறையும். உற்சாக பானமாக விளங்கும் டீ, பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. இதில் துவர்ப்பு சத்து அதிகம் உள்ளது. எலுமிச்சை சாறு புண்களை விரைவில் ஆற்றும். எலுமிச்சை, டீ தூள் ஆகியவை தோலை பாதுகாக்கும் தன்மை கொண்டவை.

## வியர்க்குருவை கட்டுப்படுத்தும் மாங்காய்



கோடை காலத்தில் உடலின் வெப்ப நிலையை நிலையாக வைத்துக் கொள்வதற்காக வியர்வையாக வெளியாகிறது. அதே நேரம் இந்த வியர்வையின் காரணமாக உடலில் வியர்க்குரு போன்ற தொல்லைகளும் ஏற்படுகின்றன. நமது அன்றாட சமையலில் பயன்படும் பாசி பயறை பயன்படுத்தி வியர்குருவை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என பார்க்கலாம். இதற்கு தேவையான பொருட்கள் பாசிப்பயறு மாவு, வெள்ளரி சாறு.

வெள்ளரிக்காயை தோல் சீவி விட்டு அதை சாறாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு ஸ்பூன் பாசி பயறு மாவுடன், சுமார் 3 அல்லது 4 ஸ்பூன் வெள்ளரி சாறை சேர்க்க வேண்டும். இந்த இரண்டு பொருட்களுமே உடலுக்கு குளிர்ச்சியை தரக் கூடிய ஒன்றாகும். இவ்வாறு கலந்த கலவையை உடலில் வியர்க்குரு தாக்கம் உள்ள இடங்களில் நன்றாக பூசிக் கொள்ள வேண்டும். சுமார் கால் மணி நேரத்திற்கு குளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வியர்க்குருவால் ஏற்படும் நமைச்சல், எரிச்சல் போன்றவற்றில் இருந்து விடுபடலாம்.

அதே போல் வியர்க்குரு, கொப்புளங்களை சமாளிக்க வேப்பிலையை எப்படி பயன்படுத்தலாம் என்று பார்க்கலாம். இதற்கு தேவையான பொருட்கள் வேப்பிலை, மஞ்சள் பொடி. வேப்பிலையை நன்றாக

அரைக்கு சாறாக எடுக்துக் கொள்ள வேண்டும். இந்த சாற்றுடன் மஞ்சள் பொடியை தேவையான அளவு எடுத்து நன்றாக கலந்து கொள்ள வேண்டும். பின்னர் இதை வியர்க்குரு, கொப்புளங்கள் உள்ள இடங்களில் நன்றாக மேற்பூச்சாக பூசி வர, கொப்புளங்கள் ஆறும். வியர்க்குருவின் தாக்கம் தணியும். குளிப்பதற்கு முன்னதாக இதை நாம் 15 நிமிடங்களுக்கு முன்பு பூசி விட்டு பின்னர் குளிக்கலாம்.

இதை காலை மாலை இரு வேளைகளிலும் பயன்படுக்கலாம். மேலும் முல்தானி மட்டியை பயன்படுத்தியும் வியர்க்குரு தொடர்பான தொல்லைகளில் இருந்து விடுபடலாம். முல்தானி மட்டி நாட்டு மருந்து கடைகளில் இயல்பாக கிடைக்கும். இந்த முல்தானி மட்டி பொடியையும், வெள்ளரி சாறில் கலந்து பூசிக் கொண்டு பின்னர் குளித்து வர வியர்க்குரு போன்ற பிரச்னைகளில் இருந்து விடுபடலாம். மேலும் தோலும் பொலிவு பெறும்.கோடையில் ஏற்படும் வியர்க்குருவை சமாளிக்க உள்மருந்து ஒன்றை தயார் செய்யலாம்.

இதற்கு தேவையான பொருட்கள் மாங்காய் துண்டுகள், வேப்பம்பூ, உப்பு, பனங்கற்கண்டு. மாங்காயை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் சிறிதளவு வேப்பம் பூவை சேர்த்துக் கொள்ள வேண்டும். மாங்காய் நன்றாக வேகும் அளவுக்கு நீர் விட்டு கொதிக்க வைக்க வேண்டும். இந்த நீரை வடிகட்டி விட்டு நன்றாக வெந்த மாங்காய் துண்டுகள்-வேப்பம்பூ கலவையை எடுத்துக் கொள்ள வேண்டும். இதனுடன் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்துக் கொள்ளலாம். பின்னர் சிறிதளவு பனங்கற்கண்டு சேர்க்க வேண்டும்.

பின்னர் இதை தேவையான அளவு நீரில் கலந்து கொள்ள வேண்டும். மாங்காய் துண்டுகள் கலந்த இந்த நீரை எடுத்துக் கொள்வதன் மூலம் உடலின் வெப்ப நிலையை சமன்படுத்தி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்கிறது. இதன் மூலம் கோடை கால பிரச்னைகளில் இருந்து விடுபட உதவுகிறது. மாங்காய் புளிப்பு மற்றும் உஷ்ணம் தரக் கூடிய ஒன்றாகும். அதை வேக வைத்து எடுத்துக் கொள்வதன் மூலம் அது உஷ்ணம் தராமல் உதவுகிறது. இவ்வாறு நாம் அன்றாடம் கிடைக்கும்

பொருட்களை கொண்டு கோடை கால நோய்கள் வராமல் உடலை பாதுகாத்துக் கொள்ளலாம்.

## சோர்வை நீக்கும் மோர்




கோடைகாலத்தில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதனால் ஏற்படும் நோய்களை போக்கும் மருத்துவம் என்ன சாப்பிட்டு நோய்களை போக்கலாம். அந்தவகையில், சிறுநீர் எரிச்சலை தணிக்க கூடியதும், உடலுக்கு குளிர்ச்சி தரும் தன்மை கொண்டதும், சோர்வை போக்கவல்லதும், தோல் நோய்களில் இருந்து பாதுகாக்க கூடியதுமான மோரின் மருத்துவ குணங்கள், மோரை பயன்படுத்தி நீராகாரம் தயாரிக்கலாம்.

இரவு முழுவதும் சாதத்தை ஊற வைக்கவும். காலையில் இதை நன்றாக கரைக்கவும். இதோடு சிறுவெங்காய துண்டுகள், தேவையான அளவு உப்பு, மோர் சேர்த்து சாப்பிடலாம்.காலையில் தொடர்ந்து சாப்பிட்டுவர உடல் உஷ்ணம் குறையும். சிறுநீர் எரிச்சல் தணியும். கண்களுக்கு குளிர்ச்சி ஏற்படும். சோற்று கற்றாழையின் தோல் நீக்கிவிட்டு உள்ளே இருக்கும் சதையை 7 முறை நீர்விட்டு நன்றாக கழுவ வேண்டும். அப்போதுதான் கசப்பு சுவை போகும். கற்றாழையின் சதையை நன்றாக அரைத்து கொள்ளவும். இதனுடன் மோர், உப்பு சேர்த்து நன்றாக கலக்கவும். இதை காலையில் சாப்பிட்டுவர உடல் புத்துணர்வு

ஏற்படுவதுடன், உடல் குளிர்ச்சி அடையும். சோற்று கற்றாழையில் மிகுந்த சத்துக்கள் உள்ளன.

இது, தீக்காயங்களை ஆற்றக் கூடிய தன்மை கொண்டது. உடலுக்கு குளிர்ச்சி தரும். மலட்டுத்தன்மையை போக்கும். மூட்டு வலி உள்ளவர்கள் குளுமையான உணவை உட்கொள்வதால் வலி அதிகமாகும் என அஞ்சுவார்கள். இவர்கள் கூட மோர் சாப்பிடலாம். மோருடன் சுக்கு, மிளகு பொடி சேர்த்து குடிக்கலாம். புளிப்பில்லாத மோரில் சிறிது உப்பு, சுக்குப் பொடி, மிளகுப் பொடி சேர்த்து சாப்பிட்டால் வாதம், கபத்தை சமன்படுத்தும்.

கோடைகாலத்தில் வெயிலின் தாக்கத்தால் நீர் இழப்பு ஏற்பட்டு தோலில் வறட்சியை ஏற்படும். இதை சரிசெய்யும் முறையை காண்போம். தேவையான அளவு மோர் எடுத்துக் கொள்ளவும். இதனுடன் எலுமிச்சை சாறு சேர்த்து கலக்கவும். பின்னர், மெல்லிய துணியை மோரில் நனைத்து 15 நிமிடம் ஒத்தடம் கொடுத்து வந்தால், தோலில் ஏற்படும் சிவப்பு தன்மை மாறும். எரிச்சல் குறையும்.

பல்வேறு நன்மைகளை கொண்ட மோர் உடல் உஷ்ணத்தை தடுக்கவும், களைப்பை போக்கவும் பயன்படுகிறது. சிறுநீர் எரிச்சலை தணிக்கும். தோலுக்கு குளிர்ச்சி தருகிறது. மோரை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இதனால் எலும்புக்கு பலம் கிடைக்கும். மோரில் வைட்டமின் சி, இரும்பு சத்து உள்ளது. மோர் சரிவிகித உணவாக உள்ளது. எளிதாக கிடைக்க கூடியதும், சிறந்த பானமான மோரை கோடைகாலத்தில் பயன்படுத்தி உடல் நலத்தை பாதுகாக்கலாம்.

தினத்தந்தி
DAILY THANTHI

## இன்றைய வேளாண் செய்திகள்

# கழுதை பால் விற்பனை மும்முரம் ஒரு டம்ளர் ரூ.50-க்கு வாங்கி செல்கிறார்கள்



கிராம பகுதிகளில் கழுதை பால் விற்க வெளி

கோவை மாவட்டத்தில் கழுதை பால் விற்பனை மும்முரமாக நடக்கிறது.ஒரு டம்ளர் பாலை பொதுமக்கள் ரூ.50-க்கு வாங்கி செல்கிறார்கள்.

கழுதைபால்

கோவை மாவட்டம் துடியலூர், பெரியநாயக்கன்பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம் மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் கழுதைகளுடன் அதன் உரிமையாளர்கள் தெருத்தெருவாக சுற்றி வருகிறார்கள்.கழுதைபால் வாங்கலியோ கழுதைப்பாலு, என்று இவர்களின் குரல் அந்த தெருக்களில் ஓங்கி ஒலிக்கிறது.இந்த குரல்

கேட்டு வருபவர்களுக்கு அவர்கள் கண் முன்பே கழுதைகளை நிறுத்தி அவற்றில் இருந்து பாலை பீய்ச்சி எடுத்து மும்முரமாக விற்பனை செய்கிறார்கள்.ஒரு டம்ளர் கழுதை பாலை ரு.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்கிறார்கள்.ஒரு சில மணி நேரங்களில் பால் விற்று தீர்ந்து விடுகிறது.கழுதைப்பாலுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு இருப்பதால் வெளி மாவட்டங்களில் இருந்து கழுதைபால் விற்பவர்கள் கோவையில் முகாமிட்டு உள்ளனர்.திருச்சி பகுதியிலிருந்து மட்டும் 30 க்கும் மேற்பட்ட கழுதைகள் கோவை வந்துள்ளன.

ஒரு டம்ளர் ரூ.50 இதுகுறித்து கழுதை பால் விற்பனையாளர்கள் கூறியதாவது:-

கழுதைகள் என்றால் அவை பொதி சுமக்க மட்டும் தான் என்று பலரும் நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் மருத்துவ குணம் கொண்ட கழுதைப்பால் குறித்து பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை.கடுமையான மலை ஏற்றங்களில் முதுகில் அதிக சுமையுடன் அனாயசமாக ஏறிச்செல்லும் கழுதைகளுக்கு அபார சக்தி உண்டு.இந்த சக்தி அதன் பாலுக்கும் இருக்கிறது. குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தி பெருகவும், மஞ்சள் காமாலை, வயிற்றுப்போக்கு மற்றும் உடல் சூட்டை குறைக்கவும், மருத்துவ குணம் நிறைந்த கழுதை பால் குடித்தால் உடலுக்கு நல்லது என்று முன்னோர்கள் கூறிச் சென்றுள்ளனர். இதுபற்றி தெரிந்தவர்கள் கழுதைப்பால் குடிக்கிறார்கள். கிராமம் கிராமமாக கழுதைகளை ஓட்டி சென்று அவர்கள் கண் முன்னே பாலை கறந்து ஒரு டம்ளர் ரூ.50 முதல் ரூ.60 வரை விற்பனை செய்கிறோம். தற்போது கிராமபுறங்களில் எங்களுக்காக காத்திருக்க தொடங்கி உள்ளனர்.கழுதை பாலுக்கு இவ்வளவு விலையா?என்று கேட்கிறார்கள். நாங்கள் கழுதைகளை மேய விடுவதில்லை. எங்களுடனேயே அழைத்து செல்கிறோம் ஒரு பருவத்தில் மட்டும்தான் அவற்றில் இருந்து பால் கரக்க முடியும்.இதற்காக அவற்றுக்கு சத்தான தீவனங்கள் கொடுக்க வேண்டி இருக்கிறது.இதனால் இந்த விலை நியாயமானது தான். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## பண்ணை கொள்முதல் குறைந்தபோதும் ஆவின் பால் விற்பனை 10 ஆயிரம் லிட்டர் உயர்வு



கோவை ஆவின் பால் பண்ணைக்கு கொள்முதல் குறைந்தபோதும், பால் விற்பனை 10 ஆயிரம் லிட்டர் உயர்ந்து உள்ளதாக அதிகாரி கூறினார்.

ஆவின் பால் பண்ணை

கோவையை அடுத்த பேரூர் பச்சாபாளையத்தில் ஆவின் பால் பண்ணை உள்ளது. இங்கு கோவை, திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 21 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தியாளர்களிடம் (விவசாயிகள்) இருந்து பால் கொள்முதல் செய்து பதப்படுத்தி பல்வேறு பாக்கெட்டுகளில் அடைத்து பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு ஆவின் பண்ணையில் குளிர்விக்கப்படும் பால், தற்போது தினசரி கோவை, திருப்பூர் மாவட்ட பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. பால் விற்பனையில் இந்த மாவட்டங்களில் 500-க்கும் மேற்பட்ட முகவர்கள் ஈடுபட்டு உள்ளனர். உள்ளூர் பால் விற்பனை தவிர, ஊட்டி, ஈரோடு,

சென்னை மற்றும் கேரள மாநில பகுதிகளுக்கும் பால் விற்பனைக்கு செல்கிறது.

கொள்முதல் குறைந்தது

இந்த நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்புவரை ஆவின் பால் பண்ணையில் சராசரியாக தினசரி 2 லட்சத்து 90 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இந்த மாதத்தின் தொடக்கத்தில் இருந்து தினசரி 2 லட்சத்து 60 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

இது கடந்த சில மாதங்களை விட 30 ஆயிரம் லிட்டர் குறைவாகும். இதற்கிடையில் ஆவின் பண்ணையில் பாலை கையாளும் எந்திரங்களின் திறன் அதிகரித்த போதிலும், பால் கொள்முதல் குறைவானதால், பால் மீதமாவதில்லை. இதனால் பால் பவுடராக மாற்றப்படுவதில்லை.

இதுகுறித்து அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது அவர் கூறியதாவது:-

விற்பனை உயர்வு

தற்போது பால் உற்பத்தி குறையும் காலமாகும். இதனால் வரத்து சிறிது குறைந்துள்ளது. ஆனால் தற்போது கொள்முதல் செய்யப்படும் அளவில் இருந்து மேலும் குறைய வாய்ப்பில்லை. கோவை ஆவின்பால் பண்ணையில் இருந்து கோவை, திருப்பூர் மாவட்டங்களுக்கு போக, மற்ற மாவட்டங்களுக்கும், கேரள மாநிலத்துக்கும் பால் வினியோகம் செய்யப்படுகிறது. பால் பண்ணைக்கு தினசரி பால் கொள்முதல் சிறிது குறைந்தபோதிலும் விற்பனை கடந்த மாதத்தை விட 10 ஆயிரம் லிட்டர் உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## கோடை வெயில் எதிரொலி: ரப்பர் பால்வெட்டும் தொழில் பாதிப்பு வருமானம் இன்றி தொழிலாளர்கள் பரிதவிப்பு

குமரி மாவட்டத்தில் கோடை வெயில் எதிரொலியாக ரப்பர் பால்வெட்டும் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், போதிய வருமானம் இன்றி தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ரப்பர் தொழில்

குமரி மாவட்டத்தின் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் ரப்பர் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக மலையோர பகுதியான அருமனை, ஆறுகாணி, களியல், கடையாலுமூடு, குலசேகரம், பேச்சிப்பாறை, ஆலஞ்சோலை போன்ற பகுதிகளில் ரப்பர் உற்பத்தி முக்கிய தொழிலாக உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் ரப்பருக்கு உலக சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. இந்த தொழிலை நம்பி சிறு மற்றும் குறு விவசாயிகளும், ஏராளமான தொழிலாளர்களும் உள்ளனர்.

பொதுவாக ரப்பர் மரங்களில் டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை இலையுதிர் காலம் நிலவுகிறது. அதன்பின்பு புதிய தளிர்கள் தோன்றி ஏப்ரல் மாதம் ரப்பர் பால்வடித்தல் தொழில் தொடங்கும்.

உற்பத்தி குறைவு

ஆனால், இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம் முதல் கோடை வெயில் கடுமையாக உள்ளது. இதனால், ரப்பர் மரத்தில் பால் உற்பத்தி குறைவாக உள்ளது. எனவே, பெரும்பாலான விவசாயிகள் பால் வெட்டும் தொழில் தொடங்காமல் நிறுத்தி வைத்துள்ளனர். அதையும் மீறி பால்வெட்டும் தொழில் நடத்தினால், 10 கிலோ ரப்பர் கிடைக்கும் தோட்டத்தில் தற்போது 3 கிலோ மட்டுமே கிடைக்கிறது. இவ்வாறு குறைவாக கிடைக்கும் உற்பத்தி, தொழிலாளர்களுக்கு கூலி கொடுக்கவே போதியதாக இல்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரப்பர் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்து ரூ.78 வரை சென்றது. அதன்பின்பு, விலையில் சற்று ஏறுமுகம்

காணப்பட்டு தற்போது ரூ.125 வரை விற்பனையாகிறது. ஆனாலும், கோடை வெயிலால் உற்பத்தி குறைவாக உள்ளதால் இந்த விலைஉயர்வு விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் பயனளிக்கவில்லை.

தொழிலாளர்கள் பரிதவிப்பு

பெரும்பாலான தோட்டங்களில் பால்வெட்டும் தொழில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் பால்வெட்டுதல், பால் வடிப்பு, மரங்களுக்கு உரமிடுதல் போன்ற தொழில்களில் ஈடுபட்டு வந்த ஏராளமான தொழிலாளர்கள் வேலையின்றி பரிதவிக்கிறார்கள். இதைத்தொடர்ந்து, போதிய வருமானம் இல்லாததால் மலையோர பகுதியில் உள்ள பல தொழிலாளர்கள் வேலை தேடி வெளியூர்களுக்கும், கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கும் சென்ற வண்ணம் உள்ளனர்.

இதனால், குமரி மாவட்ட மலையோர பகுதியில் கடும் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, மத்திய, மாநில அரசு ரப்பருக்கு குறைந்த பட்சம் ரூ.200 விலை நிர்ணயம் செய்து, சிறு குறு விவசாயிகளையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டும் என மலையோர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம் குறைந்ததன் எதிரொலி: பண்ணவாடியில் நந்தி சிலை முழுமையாக வெளியே தெரிகிறது**



மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்ததன் எதிரொலியாக பண்ணவாடியில் தண்ணீரில் மூழ்கி இருந்த நந்திசிலை முழுமையாக வெளியே தெரிகிறது.

<u>முழுமையாக தெரியும் நந்தி சிலை</u>

மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறையும் போதெல்லாம் அணையின் நீர்தேக்க பகுதியான பண்ணவாடியில் தண்ணீரில் மூழ்கி இருக்கும் நந்திசிலை, ஜலகண்டேஸ்வரர் ஆலயம், கிறிஸ்தவ கோபுரம் ஆகியவை வெளியே தெரிவது வழக்கம். இந்த புராதன நினைவு சின்னங்கள் மேட்டூர் அணை கட்டப்படுவதற்கு முன்பு நீர்தேக்க பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களின் வழிபாட்டு தலங்களாக இருந்ததால் இந்த புராதன நினைவு சின்னங்கள் வெளியே தெரியும் போது நீர்தேக்க பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்த கிராமமக்கள் இன்றைக்கும் வழிபாடு செய்து வருகின்றனர்.

நீர்வரத்து குறைந்ததன் காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் 52 அடியாக குறைந்து உள்ளது. இதனால் தண்ணீரில் மூழ்கி இருந்த புராதன நினைவு சின்னமான நந்தி சிலை முழுமையாக வெளியே தெரிகிறது.

இதே போல ஜலகண்டேஸ்வரர் ஆலய கோபுரம் மற்றும் கிறிஸ்தவ கோபுரம் 17 அடி உயரம் வரை வெளியே தெரிகிறது.

சுற்றுலாத்தலம்

கி.பி.18–ம் நூற்றாண்டில் காவிரியாறு காட்டாறாக ஓடிய போது நீர்தேக்க பகுதியில் இருந்த நாயம்பாடி என்ற கிராமத்தை சேர்ந்த மக்கள் பலர் மர்மநோய் தாக்கி இறந்தனர். அப்போது அங்கு வந்த கிறிஸ்தவ மதபோதகர் ஒருவர் அந்த மர்மநோய் நீங்க கிறிஸ்தவ கோபுரம் அமைத்து அதில் ஆரோக்கியநாதர் சொரூபம் ஒன்றை அமைத்து வழிபாடு செய்ததால் அந்த கிராமமக்கள் மர்மநோயில் இருந்து விடுபட்டதாக கூறப்படுகிறது. இதனால் இன்றைக்கும் கிறிஸ்தவர்கள் பலர் இந்த கோபுரம் வெளியே தெரியும் போது இங்கு வந்து வழிபாடு செய்வதன் மூலமாக நோய்கள் நீங்குவதாக நம்பி இங்கு வந்து செல்கிறார்கள்.

அதே போல இன்றைக்கு வெளியே தெரியும் நந்திசிலை, ஜலகண்டேஸ்வரர் ஆலயம் ஆகியவை அன்றைக்கு இருந்த காவேரிபுரம் கிராமமக்களின் வழிபாட்டு தலமாகும். தொழில்நுட்பம் இல்லாத அந்த காலக்கட்டத்தில் ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தின் முன்புற வாசலின் முகப்பில் இவ்வளவு பெரிய நந்தி சிலையை நிர்மாணித்து இருப்பது தங்களது மூதாதையர்களை நினைவுபடுத்துவது போல உள்ளது என கூறி அன்றைக்கு இடம் பெயர்ந்த காவேரிபுரம் மக்கள் இந்த நந்தி சிலை வெளியே தெரியும் போது இங்கு வந்து வழிபடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். அன்றைக்கு சுண்ணாம்பு மற்றும் சிறு செங்கற்களால் கட்டப்பட்ட இந்த புராதன நினைவு சின்னங்கள் இன்றைக்கும் சிதிலமடையாமல் கம்பீரமாக காட்சியளிப்பது சுற்றுலா பயணிகளை கவர்ந்து இழுப்பதால் பண்ணவாடி பகுதி சுற்றுலாத்தலமாகவே மாறி விட்டது.

தொல்பொருள் ஆராய்ச்சி துறையின் மூலமாக இந்த புராதன நினைவு சின்னங்கள் அவ்வபோது பராமரிக்கப்பட்டால் ஜலகண்டேஸ்வரர் ஆலயம், நந்திசிலை, கிறிஸ்தவகோபுரம் ஆகியவை ஒருசேர இருப்பது மதநல்லிணக்கத்தை காட்டுவதாகவும், பழங்கால நினைவு சின்னங்களை போற்றுவதாகவும் இருக்கும் என சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்தனர்.